## சண்முகலிங்கன் கவிதைகள்



# சந்தன மேடை

# சந்தன மேடை

தமிழ்த்தாய் புத்தகசாலை
191, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

என். சண்முகலிங்கன்

SOUTH ASIAN BOOKS
Rs.........
Colombo 11

நாகலிங்கம் நூலாலயம்
யாழ்ப்பாணம்

# SANTHANA MEDAI

Poems in Tamil by N. Shanmugalingan

© Mrs. Gowri Shanmugalingan

First Edition : 5th May 1992

Cover Photograph by : My Phillipino Friend
Cover Art Technology : Thavam, LAXSU Graphic

Published by : NAGALINGAM NOOLALAYAM
NAGULA GIRI, Myliddy South, Tellipalai,
Jaffna.

Printed at : LAXSU Graphic (Pvt) Ltd.
253/4, George R De Silva Mawatte,
Colombo 13.

Price Rs 60 .

## **என். சண்முகலிங்கன்**

சின்ன வயதிலிருந்தே கலை இலக்கியத் துறைகளில் ஆர்வமும் பயிற்சியும் கொண்ட **என். சண்முகலிங்கன்**, நல்லபல கலை அனுபவங்களைத் தந்திருக்கின்றார். கவிதை, சிறுவர் இலக்கியம், ஆக்க இசை, சிறுகதை, நாடகம், வானொலி - திரைப்பட ஊடக படைப்புக்கள் என பல் துறை ஈடுபாடு கொண்ட சண்முகனின் ஆக்கங்களில் நூல் வடிவம் பெற்றவை மிகச் சிலவே. வானொலி மற்றும் நாளிதழ்கள், சஞ்சிகைகள், கவிதா - கலை அரங்கங்களின் வழி வெளிப்பட்ட இவரின் படைப்புகளை நூல் வடிவில் தொகுத்தலின் இன்றியமையாமையை உணர்ந்ததன் விளைவே **இந்தச் சந்தன மேடை.**

**தென்மயிலைச் சண்முகனாக** அன்றைய மாணவர் கையெழுத்துச் சஞ்சிகைகளில் தொடங்கி தேசத்தின் கவியரங்குகளைக் கண்ட சண்முகன், பின் என். சண்முகலிங்கன் ஆகவும், **சண்முக பாரதி** ஆகவும் கண்ட மாற்றங்களிடை, எங்கள் கவிதைக்கான செல் நெறியினை நீங்கள் காணமுடியலாம்.

இது எங்கள் மூன்றாவது வெளியீடு. என் சண்முகனின் **என் அப்பாவின் கதையைத்** தொடர்ந்து **சி.மௌனகுருவின் சடங்கிலிருந்து நாடகம் வரையை** வெளியிட்டோம். நீண்ட ஒரு இடைவெளிக்குப் பின் சண்முகனின் சந்தன மேடையை அரங்கேற்றுகின்றோம்.

பதிப்புத்துறையில் எங்கள் கனவுகள் பல. அவற்றின் யதார்த்தம் எங்கள் தேசத்தினதும் உங்களதும் கையில்.

இந்தச் சந்தன மேடையை தமிழகத்தில் பதிப்பில் காண சண்முகன் எடுத்த முயற்சியின் பலாபலனை இந்தச் சந்தனமேடையின் கவிதை ஒன்று பேசும். யாழ்ப்பாணத்தின் மீதான பத்திரிகைத்

தாள் தடையில் "புல்ஸ்காப்" கோட்டுப் பேப்பரிலேயே அச்சிடவேண்டிய நிர்ப்பந்தமே இதன் பதிப்பினை கொழும்புக்குக் கொண்டுசென்றது. இந்தப்பயணத்தின் இடையேயான அநுபவங்களும் மகிழ்ச்சி தருவனவல்ல. காலம், இடம், பொருள்...

எப்படியோ சந்தன மேடையை எங்கள் எண்ணப்படி அழகுற காணமுடிந்திருக்கிறது.

இந்தப் பதிப்பின் அழகுக் கலைநுட்பம் லக்சு பதிப்பகத்தின் **தவம்** தந்தது. இந்த வெளியீட்டின் பின்னணியின் இருந்த அனைவருக்கும் சந்தனமேடையின் பின்னணியில் நன்றி சொல்லப்படுகின்றது. எனவே நான் எனது பதிப்புரையை நீட்டாமல் இத்துடன் நிறைவுசெய்கின்றேன்.

வணக்கம்

அன்பின்
***திருமதி.நகுலேஸ்வரி நாகலிங்கம்***
அதிபர், நாகலிங்கம் நூலாலயம்

நகுலகிரி
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை
யாழ்ப்பாணம்

# கவிதையான என்வாழ்க்கை

1.1. கவிதை என்பது வாழ்க்கை ; வாழ்க்கையே ஒரு கவிதை. இதன் அர்த்தம் கவிதை பற்றியதும், வாழ்க்கை பற்றியதுமான தரிசனத்தில் தங்கியுள்ளது.

1.2. கவிதையை வெறுமனே கற்பனைக்கலையாகக் கண்ட காலங்கள் போயின எனலாம். ஆயினும் எது கவிதை என்ற தெளிவு, முழுமை கண்டதாய்ச் சொல்லமுடியாது. எது கவிதை என காண்பதற்குப்பதிலாக, கவிதைவடிவம் தொடர்பான கட்சிச் சண்டையில்தான் காலம் கழிந்தது. குறிப்பாக தமிழ்க்கவிதை அரங்கம், எழுத்தறிமரபில் வந்ததற்கு புதிசு- புதுக்கவிதை என்று பெயர்சூட்டி, முன்னையதை பழசாக்கி - மரபுக் கவிதை யாக்கித்தள்ள, முன்னையது பின்னையதைத் தள்ள என காலங்கள் இன்றும் கழியும்.

1.3. உலகக் கவிதை அரங்கில்கூட இவ்வாறான சர்ச்சைகள் இல்லாமலில்லை. ஆனாலும் அவர்களது சர்ச்சைகள் அவர்களை சரியான கவிதைச்செல்நெறிக்கு வழிப்படுத்துவதை காணலாம்.

"கவிதையை அதன் ரிஷிமூலமான இசையிடம் மீண்டும் செல்ல விடுங்கள்"

"எழுத்தறிமரபு தந்த கவிதைவடிவங்கள், அவற்றினைத் தந்த தொழினுட்பப்புரட்சியினைத் தொடரும் ஆதிக்க வாதங்களின் கலாசாரப் பரம்பலுக்கும், விழுமியங்களுக்கும் வழிவகுப்பன; எனவே பண்பாட்டுத்தளமான செவிவழிமரபிற்கே கவிதை சென்றுவிட வேண்டும்".

என்ற குரல்கள், அண்மைக் காலங்களில் உலகக் கவிதையுலகில் ஓங்கி ஒலிப்பன.

1.4. இத்தனை மனித முயற்சிகளின் அறுவடைகளைக் கண்டபின், மீண்டும் முற்றாக செவிவழிமரபுக்கு - முன்னைய வடிவங்க ளுக்கு செல்வதா...

"இந்த இரண்டு வடிவங்களையும் உரியமுறையில் இணைத்தலே இயல்பானது; அதுவே எங்கள் கவிதைக்கான செல்நெறி" என்ற குரல்கள் மிகஅண்மையில் கேட்கின்றன.

Oral tradition, Literary tradition என்கின்ற இந்த இரண்டையுமே உரியவாறு இணைத்துக் காணும் கவிதைவடிவத்துக்கு Orature என்ற பெயரையும் இவர்கள் சூட்டியுள்ள செய்தி நம்பிக்கை தருவது.

1.5 கவிதையான என்வாழ்க்கையைச் சொல்லவந்து கவிதையுலக சர்ச்சைகளுக்கு உங்களை இழுத்துச் சென்றதை பொறுத்துக் கொள்ளுங்கள். உலகக் கவிதை உலகின் இந்தக்குரல்கள், எங்கள் கவிதையுலகில் எவ்வளவு தூரம் கேட்கப்படுகின்றன? தொடர்பின்மையும் இவை கேட்கப்படாமைக்கான காரண மாகலாம் என்ற நினைவிலேயே இவற்றினை இங்கு குறிப்பிட நேர்ந்தது.

2.1. இனி எனது கவிதை வாழ்விற்கு வருவோம். எனது கவிதைகள், அதன் செல்நெறி பற்றியெல்லாம் நான்பேசுவதிலும் பார்க்க, நீங்களாக தரிசிப்பதே நல்லது. அதுவே கலை அநுபவமுமாகும். என் வாழ்வின் காதையை என் கவிதை களினுடாக நீங்கள் தரிசிக்க முடியும் என்பது என் நம்பிக்கை. இந்த தரிசனத்திற்குத் துணையாக சிலகுறிப்புகளை மட்டும் இங்கு சொல்வேன்.

2.2 என் கவிதைவாழ்வின் மூலங்களை, என்பண்பாட்டின் புலத்திலிருந்தே நான் பெற்றிருக்கிறேன், அம்மா, அப்பா, கிராமம், கல்விக்கூடமென விரிந்தகளத்தினிடை என்கவிதை ஆர்வம் வளர்ந்திருக்கிறது. ஆரம்பத்தில் 'போலச்செய்தல்' மூலம் இந்தத்திறனை வளர்த்திடமுயன்றேன். விளைவாக, அந்தக்காலத்து 'கவியரங்கங்களில்' நானும் 'கவிஞனாக' உலவமுடிந்தது.

2.3 உண்மையில் என்முதல் கவிதை முழுமை என்வாழ்வின் அடுத்தகட்டத்தில்தான் கிடைத்தது என்பேன். பள்ளிப்படிப்பில் விஞ்ஞானம், கலை என கட்சிகட்டி நின்ற எங்கள் கல்விமுறையில் விஞ்ஞானக் கல்வியைத் தழுவியநிலையில் 'கவிதையினைக்' காணும் வாய்ப்புகிட்டவில்லை. பாரதி தரிசனம்கூட எனக்கிந்த இரண்டாவதுகட்டத்தில் தான் கிடைத்தது. இந்த இரண்டாவது கட்டம் எது என்றுகுறிப்பிடாமலேயே சொல்லிக்கொண்டு போகின்றேன்.

பள்ளிப்பருவம் முடியுமுன்னரேயே என்ஆர்வக்கலையும், கவிதையுமே தொழிலாக நான், வானொலி என்ற தொடர்புச் சாதனத்திற்கு வந்த காலத்தையே இங்கு சுட்டுகின்றேன். இந்தப்புதிய ஊடகத்திலேயே எனது பெரும்பாலான கவிதைகள் பிறந்தன. அதன்வழி அவை தேசத்தின் பட்டி தொட்டிகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை கேட்கப்பட்டன; அவற்றின் எதிரொலிகள் என்னையும் சேர்ந்தன. இந்தச் சந்தனமேடைகூட அவற்றிலே ஒன்றுதான். (இவை உண்மை; வெறும் தற் புகழ்ச்சியில்லை. இதற்கான ஆதார ஆவணங்களை இன்னமும் பத்திரமாக பேணிவைத்திருக்கின்றேன். என்னைக் கவிஞனாக்கிய பின்னூட்டல்கள் அல்லவா அவை...)

இது எழுபதுகளின் முற்பாதி அநுபவம்.

2.4 அடுத்த கட்டம் எழுபதுகளின் மத்தியில் ஆரம்பமாவது. கவிதையையும் கலையையும் தொழிலாகக் கொண்டிருந்த நான், இப்பொழுது ஒரு பல்கலைக்கழக மாணவனானேன். கவிதை பற்றிய தரிசனம் மேலும் இங்கே முழுமை காண்கிறது. பாரதியையும், பாரதி தாசனையும் ஒப்பீடு காண்பதிலிருந்து பாரதியை உலக கவியரங்கில் இணைத்து காணுகின்ற தெளிவுகளும் இங்கே கிடைக்கப் பெற்றேன். ஆனாலும் கல்வி, கவிதை ஊடகமான திரைப்படம் ஆகியவற்றில் இக்காலப் பகுதியில் முழுதாய் இணைந்த நிலையில் என்னால் அதிகம் எழுத முடியவில்லை.

2.5 தொடர்வது நான் ஒரு சமூக விஞ்ஞானியாக, சமூகவியல் விரிவுரையாளனாக மீண்டும் ஊருக்கு மீண்ட கட்டம். இதுவே இன்றுவரையான என் அநுபவக்களம். கவிதைக் களத்தையே ஆய்வுசெய்யும் ஒருவன் என்ற வகையில் கவிதை உணர்வு என் விஞ்ஞான ஆய்வின் முடிபுகளை பாதிக்கலாம் என்று பல கவிதைக் கருக்களை அழித்த காலகட்டம் இது. இருந்தபோதிலும் சில நான் அறிந்தும் அறியாமலும் வெளிப்பட்டிருக்கின்றன.

இதே காலப்பகுதியில் இந்த அறிவுலக-உணர்வுலக மோதல் களுக்கு மேலாக எங்கள் புறவுலக ஆக்கிரமிப்பும் சூழ்ந்தபோது நிச்சயமாக நான் நல்லபல கவிதைகளைத் தந்திருக்க வேண்டும். ஆனால் இது நாங்கள் ஊமைக்குழல் ஊதும் வேளை. இருந்தபோதிலும் அவ்வப்போது நாதஸ்வரத்தைக் கையில் எடுத்ததும் உண்டு. ஆனாலும் 'அமத்தியே' வாசிக்க நேர்ந்திருக்கிறது. (நாதஸ்வரத்திற்கு பதிலாக 'றம்பற்' ஊதுதல் போல் சில கறுப்புக்கவிதைகளின் வழி என் உணர்வுகளை கரையவிட்டதும் உண்டு)

வெகுஜன தொடர்புச் சாதனங்களின் மூலம் ஆயிரக்கணக் கானவர்களினால் கேட்கப்பட்ட நான் இப்பொழுது மிகச் சிறிய வட்டத்துள், ஏன் என்நெருங்கிய ஓரிரு உறவுகளுக்குள் மட்டும் கேட்கப்படும் ஒரு நிலைக்குள்ளானதையும் இங்கு குறிப்பிட வேண்டும்

நீண்ட இடைவெளிக்குப் பின்னால் இந்தச் சந்தன மேடையிலேயே என் கலையுலகச் சந்திப்பு...

இந்தக் காலகட்டங்களில் ஓங்கியொலித்த என் கலையுலக நண்பர்களில் குறிப்பிடத்தக்க சிலர் இப்பொழுது என்னிடமில்லை. நான் இருக்கின்றேன். எனது இந்த இருப்பின் நிலைபேற்றுக்குப் பின்னால் கருத்து நிலை இழக்காத

(இடையிடை குளம்பினாலும்) என் தெளிவு அடிப்படையாவதை உணருகின்றேன். எனது அநுபவங்களும் நான் கற்கும் சமூக உளவியல் அறிவும் என்னை வழிப்படுத்துவன என நம்புகின்றேன்.

கவிதையாகவே வாழ்க்கையைக் கண்டவன் இவன் என்பதை நீங்கள் என் கவிதைகள் ஊடாகக் காணலாம். அதே வேளை எல்லோருடைய வாழ்வினையும் கவிதையாக்கும் எண்ணமே என்னைக் கவிஞனாக்கியது, கவிதை பாட வைத்தது; வைக்கின்றது என்ற சிறிய பிரகடனத்துடன் இந்தக் குறிப்பை நிறைவு செய்கின்றேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று பலதடவை முயன்றும் இதற்கு மேல் இறுக்க முடியவில்லை; தவிர்க்க முடியாமல் இருக்கிறது. இனிமேல் என் கவிதை நூல்களைத் தருகின்றபோது, இந்தக் 'கதை வசனங்கள்' வியாக்கியானங்களை தரவேண்டியதில்லை என்ற உறுதியுடன், என் கவிதைகளுக்கு நூல் வடிவம் தரும் நாகலிங்கம் நூலாலயத்தை வாழ்த்தி என் கவிதைகளின் பின்னணியில் உள்ள அனைவருக்கும் நன்றி சொல்லி உங்களை என் சந்தன மேடைக்கு அழைத்துச் செல்கின்றேன்.

உங்கள் அன்பின்
**என். சண்முகலிங்கன்**

5, இராஜ வீதி
நல்லூர் யாழ்ப்பாணம்
5.5.1992

சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்
- பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

'தகதக தெய்ய தகதக' எனவே
நெஞ்சில் வைத்து சந்தம் ஊட்டி
தோளில் தூக்கி தூரங்கள் காட்டி
சந்தன மேடையைத் தந்தவன்
எந்தை
சக்கரவர்த்தி அப்பா சரணம்

# கவிதைகள்

## 1971 – 75


| | |
|---|---|
| சந்தன மேடை | 1 |
| அம்மா | 2 |
| பாப்பாவும் பாட்டியும் | 3 |
| என்னுள் பேசும் அவன் | 4 |
| சூரன் போர் | 5 |
| எங்கிருந்தோ மீட்டுகின்ற... | 6 |
| இந்த உலகின் இனிமை | 7 |
| நீலக் கயல் விழி | 8 |
| நம்பிக்கை நட்சத்ரம் | 9 |
| குளிரும் நிலவினிலே... | 10 |
| வன் செவியோ... | 11 |
| கண்ணனும் ராதையும் | 12 |
| நிதமுந்தன் நினைவூறும் | 13 |
| வாழ்வின் இதழ்கள் | 14 |
| கனவுகளில்லாமல் காவியமில்லை | 15 |
| நாளை | 16 |


## 1976 – 80


| | |
|---|---|
| காலக்குயில் | 17 |
| நான் ஒரு பாவலனாகிய | 18 |
| நான்பாடும் புதுப்பாடல் | 19 |
| சூரிய தரிசனம் | 20 |
| ஞானம் | 21 |
| சரித்திர நவீனங்கள் | 22 |
| தேசிய ஞானம் | 23 |
| கரை தெரியும் | 24 |

## 1981 - 85


| | |
|---|---|
| சுதந்திரமா... | 25 |
| பிலிப்பைன்ஸ் | 26 |
| நீயுமா? | 28 |
| பாவமன்னிப்பு | 29 |
| சிவனே ! | 30 |


## 1986 - 90


| | |
|---|---|
| அண்ணமார் | 31 |
| சர்வதேச வீடமைப்பு? | 32 |
| மீண்டும் வேண்டும் | 33 |
| மிளகாய் தோட்டத்திலே... | 34 |
| மலைவாழையல்லவோ ! | 35 |
| அர்த்தம் வேண்டும் | 36 |
| என்னைப் பிடித்த கருமை | 37 |
| இன்னந் துயிலுதியோ ! | 38 |
| பாரதி தேசத்தில் என் கவிதை அரங்கேற்றம் | 39 |
| அப்.. பா... | 41 |
| விழுவதும் எழுவதும் | 42 |


## 1991 - 92 ஏப்ரல் 24


| | |
|---|---|
| கரை சேர்ந்தோம் | 43 |
| அக்கா என் ஆதாரம் | 44 |
| தங்கச்சியின் விடுதலை | 45 |
| Key tack | 46 |
| எனது வேகமும் எருமைகளும் | 47 |
| பன்றிக் கெய்த குளமும் சித்திரைப் பௌர்ணமி நிலவும் | 48 |
| கண்ணீரைத் துடைத்துக் கொள் | 49 |
| மழை வேண்டும் | 50 |
| உன்னைப் போல் ஒருவனாக... | 51 |
| அர்த்தங்கள் தெரியும் | 52 |

# சந்தன மேடை

சந்தன மேடை எம் இதயத்திலே...
உன்
சதங்கையின் நாதம் தான் கேட்குதடி
மந்திரமில்லாத மயக்கமடி...
மாமயில் நீ எம் தேவியடி...

பாட்டுக்கு ஆடிடும் பாவையாள்
அவள்
பாவமெல்லாம் புதுமை ராகம் தான் ...
மானுடத்தின் குரல் ஒன்று தான்
அவள்
மனதை மயக்கியது உண்மை தான்

கானத்தில் கனிந்தவள் வந்திடுவாள்
இங்கு
கண்டறியா இன்பம் தந்திடுவாள்
வானத்திலே ஒளிரும் நட்சத்ரமாய்
எங்கள்
வாழ்வுக்கு வழிகாட்டி நின்றிடுவாள்

பொன்னுலகின் புதிய கீதங்களே !
பூமியின் சௌந்தர்ய கோலங்களே !
மின்னிவரும் நாளை மேன்மைகளே !
மானுடத்தின் வெற்றி நாதங்களே !

# அம்மா

நெஞ்சு குளிருகின்ற
நிலவான கோலங்கள் ...
'குஞ்சு குஞ்சு'
என்று அன்னை
கொஞ்சும் காலங்கள்
பிஞ்சு மனம் பெரியவனாய்
இன்று வளர்ந்தது
பெற்றவளின் கனவெல்லாம்
கனிந்து நிறைந்தது

அவளுடைய கனவுகளில்
நீள இருந்தவன் ...
ஆண்டு பத்துத் தவங்கிடந்த
பேறாய் உதித்தவன் ...
எவரெவரோ... எத்தனையோ...
உறவுகள் கண்டேன்
எந்தன் அன்னை,
அன்பின் உண்மை,
அவை வெல்லுமா ?

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்
தன் மகனை
சான்றோன்
எனக் கேட்கும் தாயவள்
ஈங்கென் இருப்பினிலே எத்தனையோ அர்த்தங்கள்
எல்லாமே எந்தன் அன்னை
ஆதார உச்சங்கள்.

# பாப்பாவும் பாட்டியும்

காலைக் கட்டித் தூரத்தள்ளி
கன்றுக் குட்டி கத்தவே
பால் கறக்க வென்று பாட்டி
ஆவலோடு குந்தினாள்

கன்று கத்தி அழுத ஓசை
காதினுள் விழுந்ததும்
நன்று பால் குடித்திருந்த
நமது தம்பி கதறினான்

பால் குடிக்க மாட்டனென்று
படுத்திருந்து அழுதவன்
பால்கறந்த பாட்டி மீது
பாசமில்லை என்றனன்

பாட்டி ஓடிச் சென்று கன்றை
பால்குடிக்கச் செய்தனள்
'பாட்டி அச்சாப் பாட்டி' யென்று
பாடிப் பால் குடித்தனன்

# என்னுள் பேசும் அவன்

அன்னையை
'அம்மா' என்றே
ஆசையோடழைக்கும் பேற்றை
முன்னையோர் விபத்தில் நீத்த
மூச்சுள்ள பிணம் நானம்மா!

சின்னனில் நானிசைத்த
சிங்காரப் பண்களெல்லாம்
மின்னலாய்ப் போக
மிருகமாய்க் கிடக்கின்றேன் நான்

மண்ணிலே நலியு மேழை
மனிதர்கள் வாழ்வைக் காக்கும்
பண்ணினைக் கூட
பாடநான் ஊமையம்மா!

பேசாமலிருத்த லொன்றே
பெரிய நற்தவமென்பார்கள்
பேசவே மாட்டா நானும்
பெற்றது என்ன பேறோ!

உண்மையைச் சொல்லி
உள்ள
ஊற்றினை உலகிற்பாய்ச்ச
கண்ணென உதவும்
ஏட்டுக் கவிதை
என் உயிரின் காப்பு

# சூரன் போர்

சூரன் போர் திருவிழா
சுறு சுறுப்பாய் நடக்கிறது
சூரனின் கொடுமை சாய்க்க
சுவாமியும் கிழம்பிவிட்டார்

திருவிழா உபயகாரன்
திரு பழைய மணிய காரன்
பெருமை யோடங்கு மிங்கும்
பே(ா)ய்ச் சாதி காத்து நின்றார்.

ஊரினை உறிஞ்சும்
அந்த
உபயகாரன் தொடங்கி
சூரன் போர்ச் சனங்களெல்லாம்
சுவாமியின் பக்கத்திற்றான்

வீதிக்குத் தூர
அப்பால்
விளாத்திக்கு கீழ் ஓர் கூட்டம்
சாதியாஞ் சூரன்
தீமைச் சாவுக்காய்க் காத்திருந்தார்

தூரவே நின்று பார்த்த
துடிப்புள்ள சூரன் போரின்
தீரங்கள் கண்டகூட்டம்
திரண்டது சூரன் போர்க்காய்

திருவிழா வேஷக்காரர்
திரை கிழிந்து அழியு மட்டும்
திருவிழா உபயமின்றித்
தினந்தினம் சூரன் போர் தான்!

# எங்கிருந்தோ மீட்டுகின்ற...

எங்கிருந்தோ மீட்டுகின்ற
வீணை ஒலி
என்
இதயம் அளந்த கதை
சொல்லிடவா ...
பொங்கிவரும் என் இதய உணர்வுகளால்
உனை
போற்றியொரு காவியம்
நான்தரவா ...

ஏழை மகன் வாழ்வினிலும் செல்வமருள்
கலை
வாணி உனை வாழ்த்துவதும் உன்னருளே
நாளை மலர் நல்லுலகம் உன் அறிவே
புவி
நன்றி சொலும் புதுமை யெலாம் உன்னழகே

நெஞ்சினிய நல்லவர்கள் வாழ்ந்திடவும்
இங்கு
நெஞ்சமிலாதவருந் திருந்திடவும்
அஞ்சியிருள் ஓடிடவே எங்கணுமாய்
உன்
ஆட்சியருள் ஓங்கிடவே இன்னமுதாய்

# இந்த உலகின் இனிமை

அந்தி மயங்கிடும் வேளையிலே
அழகிய கடற்கரை மீதினிலே
சிந்தை மகிழ்ந்திட நானிருந்தேன்
கலை
சிந்தும் அழகினில் ஆழ்ந்திருந்தேன்

தென்றல் வந்து எனைத்தழுவ
அந்த
தேனினுமினிய குயிலிசைக்க
என்றன் இன்ப மன அலைகள்
பொங்க
எங்கும் இனிய கண் காட்சிகண்டேன்

வானில் மறைந்திடும் ஞாயிறு...
வர்ணக் கதிர்களின் ஜாலமதில்
தேனில் சுவைத்திடும் வண்டெனவே...
தேகம் சிலிர்த்திட நானிருந்தேன்.

தோணி மீதினில் தோழர்களாய்
அங்கு
தோன்றும் மீனவர் உழைப்புடனே
நாணித் தயங்கியே தோன்றும்
எங்கள்
நங்கை வெண்ணிலவாளைக் கண்டேன்.

# நீலக்கயல் விழி

நீலக்கயல் விழி
நீந்தியென் மீதினில்
நித்தம் சுழலுவதேன்
அந்த
சேலைத் தலைப்பசைந்து
ஆடியென் ஆவலை
தூண்டியே
ஓய்வதுமேன் . . . ?

சின்ன இடை
அசைந்தே ஆடுவதும்
சிட்டாய்ப் பறந்து
பண்பாடுவதும்
என்னில் புது உணர்வு
ஊட்டுவதும் பின்பு
ஏங்கவிட்டே மறைந்து
ஓடுவதும்
ஏனோ?

கன்னியெனக் கனிந்தே இணைந்து நல்ல
காவிய வாழ்வு தனில் சுவைக்க
உன்னையல்லால் இங்கு யாருளர் சொல் . . .
இன்ப ஊற்று
நீ யின்றி
உயிர் எனக்கேன்

# நம்பிக்கை நட்சத்ரம்

வானத்து வண்ணத் தாரகையாய்
ஒளி
வாழ்வு தந்தவளே...
என்
கானங்கள் கல்யாண வசந்தங்களாக
கனிந்து வந்தவளே...

சூனியமாகி
இருண்ட என் வாழ்வில்
சுடரை ஏற்றி வைத்தாய்...
நான்
இனித்தனியன் என்பதை மாற்றி
நாமென நீ இணைந்தாய்...

நம்பிக்கை
என்னும்
நட்சத்ரமே
நம்
வாழ்க்கையின் அர்த்தங்களே !
நாளை
நம் காலத்தின் ராகத்திலே
நலங்கெனும் கோலங்களே !

# குளிரும் நிலவினிலே ...

குளிரும் நிலவினிலே ...
 இரு பறவை ...
வளரும் உறவினிலே ...
 ஒரு பிரிவு ...
நிலவும் சுடுவதுமேன் ...
 இனியிருளா ...

நிலவே இனி வருநாள் ...
நான் தனிமையிலா ...
நீயும் மறைவதும் ஏன் ...
கண்ணீர் கடலிருளிதுவா ...

குளிரும் நிலவினிலே ...
 இரு பறவை ...
வளரும் உறவினிலே ...
 ஒரு பிரிவு ...

# வன் செவியோ !

என்னுடைய கானங்கள்
இனி உன்னைச் சேராதோ

உன் செவியும் வன்செவியாய் போச்சோ!
மந்திரமில்லாத
மயக்கங்கள் என்ற தெல்லாம்
மந்திரத்தால் தான் மாறிப் போச்சோ!
இல்லை, தந்திரம் தான் வென்று போச்சோ !

மலைக்கோட்டைப் பிள்ளையார்
சத்தியங்கள் எல்லாம்
மலையேறித் தான் போச்சோ !

குலங்கள், பகுதிகள், பதவிகள் பார்த்தா
குலவினோம், கவிபாடினோம் ...

என்
வாழ்வென்ற கவிமாலை
வரி ஒன்றும் முடியாமல்
இருளாக்க மனம் வந்ததோ
இனி என்
கவியெல்லாம் கதி இழந்ததோ !

# கண்ணனும் ராதையும்

கண்ணனின் கோயிலும்
ராதையின் பூஜையும்
காவியக்கனவுகளா - இந்த
மண்ணிலோர் மானுடன்
காத லென்றால் துயர்
மாறாத நினைவுகளா

கண்ணீரில் அபிஷேக ஆராதனை
இந்த
கண்ணனின் கானத்தின் கருவேதனை
கண்ணே நீ காணாத இருளா இனி
காலங்கள் ஒளியாகும் இசைபாடு
நீ...

ராகங்கள் கல்யாண நிலவாகுமா...
ராதா நம் ராஜ்ஜியம் நிலையாகுமா ...
மேகங்கள் முகிலாகி மழையாகுமா ...
மேதினி நம் வாழ்வின் நிழலாகுமா ...

# நிதமுந்தன் நினைவூறும்

"மழைசிந்தும் கடலோரம்
கிளை நண்டு படம்கீறும்
நிலை கண்டு என் நெஞ்சில்
நிதமுந்தன் நினைவூறும்"

என்றோ ஒருநாள் நீ
எழுதிய கவிதை இது -
அன்றொருநாள் நீ இந்த
அழகான கவிதந்து
நன்றான இசையில்
பாடடா! என்றாய்
ஆனந்த ராகத்தில் நான் பாடப்பாட
அழகாக மேசையில் நீ தாளம் போட
ஆனந்தலோகத்தில் மிதந்தோமே அண்ணா !

இன்றும் அதே பாட்டை
என்னுள்ளே இசைக்கின்றேன்...
ஆனந்தமில்லை... அழகானராகமில்லை
அன்போடு கேட்டுத் தாளமிட நீயும் இல்லை...
என்றாலும்...

அங்கையன் அண்ணா,
மழைசிந்தும் கடலோரம்
நிதமுந்தன் நினைவூறும்

# வாழ்வின் இதழ்கள்

அரும்பு மலர்கிறது
அன்னை மடியில், அன்புத் தாலாட்டில்
தன்னை மறந்து தவழ்ந்து வளர்கிறது

மெல்ல இதழ்விரிய
எடுத்தடி வைத்து எழில்கள் காண்கிறது
அடுத்த இதழில்
ஏடுதொடங்கல்
துள்ளும் பருவம் பள்ளி செல்கிறது
ஒத்த வயதினர் ஒருமை வளர்கிறது

பூப்புப் பருவம் மலரமலர
புதுமை உணர்வுகள்... புதிய கவிதைகள்
கயல் விழிஎன்றும், காவியமென்றும்
மந்திர மில்லா மயக்க மொழிகள்...

கால இதழ்கள் மேலும் விரிய
குடும்ப நிறுவனம், சமூக தரிசனம்
வீரமும் போரும் வெறியாய் வளர
பேரும் புகழும் வினைகளும் பெருகும்

இன்னும் இதழ்கள் விரிய
இளமைத் துடிப்பு அடங்கும்
போதனை, பொன்மொழி, பொறுமை
அனுபவ ஞானம் அமைதி காணும்

இறுதி இதழ் விரிய
கண்கள் சுருங்க கருத்தும் தளரும்
மழலைப் பருவம் மீளும்

காலமுடிவில்
கடைசி இதழும் கருகும்

# கனவுகளில்லாமல் காவியமில்லை...

ஆனந்தமான அர்த்தங்கள் தேடி
அலைகின்ற பயணங்கள் தொடரும்...
ஆனாலும் வாழ்வின் அர்த்தங்கள் யாரும்
அறியாத பொருளாகி மறையும்...

ஆயிரமாயிரம் ஆசை மலர்கள்
ஆத்ம பூங்காவினில் அரும்பும்...
அத்தனையும் கனியாவது மில்லை...
அழுதும் பயனேது மில்லை...

கனவுகளிங்கே கனிந்த போதும்
கவலைகள் முடிவது மில்லை...
நினைவுகளோடிணை நிழலெனுந்துயர்க்கு
நீள்துயில் ஒன்றே எல்லை...

கற்பனைச் சிறகுகள் முறிகின்றபோது
காவியம் முடிவினைக் காணும்
வெற்றிகள் தோல்விகள் ஒன்றெனக் காணும்
தத்துவ ராகங்கள் பிறக்கும்

ஆனாலும் வாழ்வின் அர்த்தங்கள் தேடி
அலையும் பயணங்கள் தொடரும்...
கனவுகளே... வாழ்வின்
சிறகுகளே...

# நாளை

வாழப்பிறந்த என் செல்வமே
ஓடிவாடா,
வாழ்ந்து காட்டிடுவோம்
தாழ மிதித்திடும் தீயவர்கள்
தலை
தாழ நிமிர்ந்து நடந்திடுவோம்

இன்று வழியின்றி வாடிடலாம்
ஒரு
இனிமை யறியாமல் ஏங்கிடலாம்
நன்று விடிந்திடும் நாளையடா
அந்த
நம்பிக்கையே உந்தன் கையிலடா

பொங்கிவரும் புது வாழ்வினிலே
இந்த
புவியின் கொடுமைகள் சாவினிலே
சங்கொலித்தே மகிழ்ந்தாடிடுவோம்
அந்த
சாதனை நாட்டிட வா மகனே !

# காலக்குயில்

பாலைவெளியான நெஞ்சில்
பால் நிலவுப் பாடல் தந்தே
காலம் இனிதாகு மென்றாய்
கானக்குயிலே
இன்று
காவியங்கள் பாடுகின்றேன்
நானும் இனிதே

கோல மணிக் குரலெடுத்து
கூவுகின்ற கான மெல்லாம்
ஞாலம் உயர்வாக வென்றே
நாடுங்குயிலே
நாயகி நீ வாழி என்பேன்
நாளும் இனிதே

ஏழை இவன் பாதையிலே
இன்ப ஒளித் தாரகையாய்
நாளை விடிவாகு மென்றாய்
காலக்குயிலே
நவயுகத்து நாயகி நீ என்
ஞானக் குயிலே !

# நான் ஒரு பாவலனாகிய.....

வெள்ளிதழ்
மல்லிகை
மென்கரம் மீட்டிடும்
வீணை என் இதயமடி
இங்கு
விளைவதுன் பாடலடி

மோகன ராகத்தின்
மன்மத கானங்கள்
மூட்டிய மோகமடி
இன்று
நானொரு
பாவலனாகியகாவியம்
நீ வந்த நேரமடி

கண்களின் நீரலை
காட்சியின் கோலங்கள்
கானத்தில் கலையுதடி
எங்கள்
இன்கலைக் கோயிலில் என்றும்
உன்
இசைதான் தெய்வமடி

# நான் பாடும் புதுப் பாடல்

வான் மீது விளையாடும் மேகங்களே
இது
நான் பாடும் புதுப் பாடல்
கேளுங்களே

வான் செல்லும் இடமெல்லாம்
நீர் செல்லலாம்
வளமான உலகங்கள் தனைக் காணலாம்
நான்
இங்கு இருந்தென்ன நலம் காணுவேன்
நவமான ஒளி காண துணை நாடினேன்

மனமென்ற ரதமேறி வருவேன்
உடன் எனை
மனமார வரவேற்க வரவேண்டுமே
தினம்
இந்த உலகெங்கும் திரிந்தின்பமாய்
தேனான கவிபாடி உலகாளலாம்

# சூரிய தரிசனம்

என் அப்பாவை ஓர் ஆசிரியனாக்கிய
அன்பின் புகலிடமே !
உன்னைத் தரிசிக்க வந்திருந்தேன்

அப்பா சொல்லும்
நாற்பதுகளுக்கு அப்பால்
நீ பெரிதாய் நகர்ந்ததாயில்லை
எத்தனை உழைப்பு... எத்தனை இழப்பு...
இன்னும் ஏனடா...

உன்னை எழுதவும்
உனக்காய் வாழவும்
எண்ணம் நிறைய உண்டு
அனுபவம் இல்லாமல் அழுவது வாழாது
என அதை நீள தள்ளியதுண்டு

அன்று
எங்கள் அடுப்படிகளில்
உன்
பிள்ளைகளின் தரிசனம்
இன்றும்
தலைநகர் 'ஹொட்டேல்களில்' அவர்களின் தரிசனம்
இவர்களில் சிலர் எனது சிறுகதை
நாயகர் ஆனதுமுண்டு
இன்னும் இவர்களைக் காவியமாக்கும்
எண்ணம் தணிந்ததில்லை

மலையகமே !
அன்று நான் உனது
சாமிமலையில் கண்ட
ஆயிரம் கோடி சூரிய தரிசனத்தை
என்று உன் வாழ்வில் காண்பேன் !

# ஞானம்

சுடுகின்ற எங்கள்
தெருக்களில் செருப்புமின்றி
பாதயாத்திரையில், பணிகள் பல செய்த
ஆசான் எந்தன் அரசியல் தந்தையாக,

தேடியே பலப்பல நூல்கள் பயின்றேன்
சித்தாந்தம் தெளியத்திரிந்தேன்
உரிய நிறச் சட்டைகளில்
ஊர்வலமும் போனேன்...
மேதினங்கள்
ஒற்றுமை மாநாடுகள்
மாணவனாய் போராட்டங்கள்
முன்னணியில் நின்றேன்...

சித்தாந்தம் சொன்னபடி
தெய்வத்தையே மறுத்தேன்...
கண்டது என்ன ?
பொய் முகங்களும்...
வெளிறும் நிறங்களும்...
ஞானம் பெற்றேன் !

'அந்த' ஞானத்தின்
ஆழம் கண்டேன்
அதே வேளை
இங்கு
உலவுகின்ற ஞானியரின்
உருக் குலைவுக்காய் அழுவேன்!

# சரித்திர நவீனங்கள்

"இலங்கையா ஈழமா...
இல்லைச் 'சிலோன்' தானா...
ஸ்ரீ லங்கா என்றால்
ஸ்ரீ தமிழா, சிங்களமா...?
இரண்டுமே யில்லாமல்
சிறப்பு வட மொழிக்கா...?
எங்களது பழம் 'பாலை'
எடுத்தியம்பும் தேசமிதா...
சிங்களவர் தீவென்றும்,
ஏடுகள் செப்பினவா...?

"இராஜாதி ராஜனா? இராஜ சிங்க ராஜனா?
பராக்கிரமபாகுவா? பரராசசேகரனா?
துட்டகாமினியா? எல்லாளனா?"

உன்னுடைய ஆராய்ச்சி முடிந்ததா?
ஆழத் தோண்டவும் அகலத் தோண்டவும்
அவனவனிடையில் அவநம்பிக்கைகள்
அமைச்சரவைகளின் அகழ்வாராய்ச்சிகள்

சமூக விஞ்ஞானம் இங்கே
சரித்திர நவீனங்கள் எழுதும்
பிறக்கின்ற பிள்ளைகளுக்கும்
அவை பாடமாகும்
பின்னர் எப்படி ஆராய்ச்சி முடியும்?

# தேசிய ஞானம்

புத்தனுக்கு ஞானம் வந்ததும் ஓர் இரவு
எந்தன்
புத்தியிலும் சில கேள்வி நேற்றிரவு

புத்தம், தம்மம், சங்கம் கச்சாமி
ரத்தம், தங்கம், சங்கம் என ஆச்சா?

சந்திக்கு சந்தி நிற்கின்ற, இருக்கின்ற
புத்தர்கள் எல்லோர்க்கும் கண் கெட்டுப் போச்சா?

58ல் நடந்தது கேள்வி
அதற்குப் பின்னுல்நேரடித் தரிசனம்

தேசிய ஒருமையில்,
தெருவினில் ஓர் இனம்
ஓடலில், அழிதலில் நேற்றிரவு

"போரா, சமாதானமா?"

என்
தேசியம் பற்றிய கேள்விகள்
எழுந்ததும் இந்த இரவினில் தான்

# கரை தெரியும்

காவிய வாழ்க்கையின் கரை தெரியும்
காலம் வெகுதூரமில்லை
கலங்கிடும் ராகத்தின் ஸ்வரங்களை மாற்று
கானத்தில்
இனிமை தா,

கண்ணே
அழகான கடல் மீது
அலைகின்ற ஓடம்
எழிலான தேசத்தின் கரையின்று காணும்
நிழலாடுந் துன்பங்கள்
நீர்க் குமிழாகும்
நெஞ்சத்தில் நின்மதி சூழும்

அலையாகிச் சுழியாகி
அழிவென்று வரலாம்
அவையெங்கள் அஞ்சாமை ஒளிமுன்பு இருளாம்
இலை என்ற சொல்
இங்கு
இலையென்ற நிலையாய்
எல்லோர்க்கும் வாழ்வென்ற இனிதான புவியாய்
எங்கள்
காவியத்தின் கரை தெரியும்
காலம் வெகுதூரமில்லைக் கண்ணே!

## சுதந்திரமா...

சரஸ்வதி ... லட்சுமி
ஆண்டவனே என்று
பெயர்களுக்கு குறைவு இல்லை

பின்னை என்னகுறை...
சுண்டுக்குளியில் 'அட்மிசன்' இல்லையா?
சுவிற்சலாந்துக்கு 'விசா' இல்லையா?

ஐயற்றை பள்ளிக்கூடமும்
அரிவெரியும் போதுமென்று
அரைவயிற்றை முழுதாக்க
அடிமைக் கூலிகள் ஆனவர் - இவர்கள்

இன்னுமா..., அடிமைகளா...
எங்கே... என்பீரோ...
ஆராய்ச்சி வேண்டாம்
அடுப்படிக்குச் செல்லுங்கள்
கரிப்பானைச் சுவடுகள், கருக்கிய தழும்புகள்
கண்டு பிடிக்க அடையாளங்கள்

சுடுபவர்கள்... வானத்தில் இல்லை
சுதந்திரம் பேசும் உங்கள் சுற்றத்தில்தான் !
சுதந்திரமா...
இந்த சரஸ்வதிகளின் தரிசனம் இன்றியும்
சுதந்திரமா...

# பிலிப்பைன்ஸ்

வாழ்ந்தது கொஞ்சக் காலம் என்றாலும்
நெஞ்சில்,
வாழும் தேசம் தான்

அழகிய இளகிய நெஞ்சங்கள் ...
அக்கினோ, இமெல்டாவும் உண்டு தான்!

நகரத்தில் 'ஜீப்னி'
கிராமத்தில் எருமை
நளினம் நிறைந்த தேசம் தான்!

நகரத்துச் சினிமா, தமிழை விட மோசம்
கிராமத்து கலை யெல்லாம் அருமை தான்!

பல்கலைக் கழகங்கள், பெயருக்கு ஏற்பவே
பல்கலைக் கோயில்கள் தான் - அங்கு
பெரு மனம் கொண்ட பேராசிரியர்கள்
பெற்ற தென் பேறு தான் !

தேசத்தின தந்தை ரிஸாலுக்கு கோயில்
அவர்
தேசியம் வியப்புத் தான் !
ஆனுல்
அக்கினே கொலேகள்...
இமெல்டா செருப்புகள்....
அங்கேயும் அவலம் தான் !

அரசியல் புரட்சி அலைகள் எங்கணும்
ஆழமதாய் கேட்கும்

சில
மாநில தீவுகள் சுதந்திர நாடாய்
தனித்திடப் போராடும்.
என்னதானிருந்தாலும் எல்லோர்க்குமே
அங்கு
மயக்கம் மேலையில் தான்
"சண்,
உங்கள் தேசத்திலும் Coca Cola உண்டா..."
என் தேசத்தை வியப்பதும் இதிலே தான்!

நவ குடியேற்றத்தின் வாதப்பிடிப்பினுள்
நல்லாய் நசிகின்றார்
நம்மை போலவே
அவர்களும் கூலியாய்
நாடெல்லாம் அலைகின்றார்...

நசிந்து கிடந்தாலும் 'நல்ல நிறம்'
எனத் தம்மை நினைக்கின்றூர்
சிலர்
நம்மை ஆசியர் என்று நகைத்துமே
தம்மை மறக்கின்றூர்

இந்த நிலைமைகள் எரிச்சல் தந்தாலும்
இனிய மனிதர்கள் தான் !
என்றும்
சந்தோஷமாகவே சிரித்து உழைப்பதில்
நெஞ்சைத் தொடுபவர்தான் !

வாழ்ந்தது கொஞ்சக் காலம் என்றாலும்
வாழும் தேசம் தான் !

*'ஜீப்னி' - யப்பானிய ஜீப் வண்டிக்கு வர்ண அலங்காரமும் பாரம்பரிய வாகனமான குதிரை வடிவங்களும் சேர்த்து, பிலிப்பினோ மக்கள் கண்ட வாகனம்*

# நீயுமா?

என்னுடைய தம்புரா
என்னை விட்டுப் போனது...
என்னை மறந்து போக
எப்படி முடிந்தது...

போகும் போது நீ... என்ன நினைத்தாய்
போகும் வரை இனி எதை நினைப்பேன்...
சாகும் வரை நானே ஆதாரம் என்றாய்
இன்று
போகும் போது நீ... என்ன நினைத்தாய்

குழந்தை என்று தானே
உனை நினைத்தேன்
கொஞ்சிக் கொஞ்சித் தானே
உனை வளர்த்தேன்
தோளுக்கு மிஞ்சியதைக் காட்டி விட்டாய்
என்னை
தூரத்து மனிதனாய் தள்ளி விட்டாய்

கலையாத ஸ்ருதி யென்று நானிருந்தேன்
உனக்காய்
கரைதலிலும் வாழ்வைக் கழித்திருந்தேன்
நிலைமாறும் புவிமீதில் நீ... யுமா...
விலைபோனாய்... புரியவில்லை...
நிலைமாறுமா...

## பாவமன்னிப்பு

கலைந்த தம்புராபோல்
காதினுள் நீ அறுக்க உறக்கமே இல்லையடா

நீதிக்காய்த் தானோ உன் அலைச்சல்?
காலையில் எந்தன் கைக்குள் மடிந்தது
உன்
காதல் இணையோ...கடைசித் தங்கையோ...

ஒரிரு நாள் கூட இல்லாத இருப்பினிடை
நான் யமனாய்...
சாகையிலே
அவள் வயதும் என்னவோ!
வட்டம் சுருங்கிய நும் வாழ்க்கை விபரம்
அக்காவின் 'நோட்சில்' இன்று தான் கண்டது

கற்றதன் பின்னாலும்
கொலைத் தொழில் போகவில்லை
சின்னப் பருவத்தில் இல்லாத குணம் இது
அம்மம்மா சொல்லுவா...
நீங்கள்
தப்பிடும் கதைகளை

ஒரு வாரம் யுகமாகும் உங்கள் வரலாற்றில்
ஒரு நூறு ஆண்டு வாழும் திமிர் எனக்கு
எங்களது பரம்பரையை மன்னிப்பாயா...

இன்னுமொரு வேண்டுதல் !
உன் பசியை நானும் உணராமலில்லை
என்றாலும், நீ என்னை உறிஞ்சல் பாவம்
ஏதேனும் புதிதாய் தின்னப் பழகு

# சிவனே!

'சிவனே என்று நாங்கள் இருந்த
காலங்கள் போயினவா?'
இது அப்பாவின் அங்கலாய்ப்பு
'தென்னாடுடைய சிவனே போற்றி'
இது அம்மாவின் ஆராதிப்பு
சிவனே!
இங்கே
உன் நாட்டவர் படும்பாடு அறியாயா?

நேற்றிரவும் உனக்காய் விழிப்பிருந்தோம்
சிவனே!
இந்த ஒரு இரவு மட்டுமா?
நாங்கள் உறங்கி எத்தனை நாள் ஐயா!

மறுபிறப்பில்
பேரின்பம் காணும் பேராசை இன்றில்லை
வினைகளைச் செய்வதற்கும்
யாக்கைகள் வேண்டுமே!
இங்கு
உன்னுடைய புராணமும்
உன் மகனின் கவசமும்
உச்சரிக்காத பொழுதே இல்லை, ஐயா!

அதர்மம் அழிக்கும் உன் அற்புதத் தாண்டவம்
நிகழும் நிகழும் என்று
நீளத் தவங்கிடந்தோம்...
இன்று
நாங்களே ஆடவும் தொடங்கி விட்டோம்!
எங்கள் ஆட்டம் கண்டு
நீயும்
'சிவனே'
என்று இருந்து விட்டாயா?

## அண்ணைமார் ❦

பூமி பிளக்காதோ!
அண்ணமாரே
சாமிகள் ஆனீரோ!

எண்ணக் கனவுகள்
எல்லாம் தொலைந்திட
மண்ணின் உரம் நீரோ!

வேலி ஓரத்து எலுமிச்சையடியில்
நீறுபூத்த உங்கள் சாம்பரும் 'ரயரும்'

பூமிபிளக்காதோ!
அண்ணமாரே
சாமிகள் ஆனீரோ!

கன்னிமாராகிய
நும்
காதல் மனைவியர்
கண்ணகியாய் எழுவாரோ!
அண்ணமாரே
கன்னிமார் எழுவாரோ!
நும் போல்
எத்தனை அண்ணமார்...
எத்தனை கன்னிமார்...
எழுக! குலம் காக்க!

❦ *1987 பெப்ரவரியில், கட்டுவன் கிராமத்தில் இராணுவ அழிப்பில் சாம்பரான என் அண்ணன்மார் சின்னக்கிளி, ராசா.*

# சர்வதேச ? வீடமைப்பு

சர்வதேச வீடமைப்பு
டும் டும் டும்... கண்டிய நடனம்
சகலருக்கும் வீடமைப்பு
டும் டும் டும்... தேசிய நாடகம்

கட்டு கட்டு ... பிரமா கட்டு
கட்டுவனில்... கட்டுவனில்
பிரம்ம ராட்சதர்
இடி இடி இடி

தனதனதனன தனதனதனன
தனதனதனன தனதனனா
வசந்தன் ஆடி மகிழ்ந்த பூமியில்

டாங்கு டாங்கு டகு
டகு டகு டகு டகு
வீடும் சுடலையும் ஒண்டாய்ப் போச்சு...
மயான காண்டம்... மயானகாண்டம்...

“பதி எழு அறியா
பழங்குடி” வாழ்க்கை
பரதேசிகளால்
போச்சு... போச்சு...
தர்மம் பேசி
பேசிப் பேசி
தமிழன் பூமியில்
‘கழுகுக்’ குண்டு

சர்வதேச பயங்கரவாதம்
சர்வதேச வீடழிப்பு!

# மீண்டும் வேண்டும்

வீரபத்திரர் கோயில் வீதியிலே
செம்பாட்டு மணற் பரப்பில்
நாகசுரக் கச்சேரி
மேளச்சமா லயங்களிலே
நாம் கலந்த நாட்கள் உடன் வேண்டும்

ஊமைக் குழல் ஊதி... ஊதி
ஐயோ...
நெஞ்சு வெடிக்கும்
இந்த
அவலம் முடிக்கும்
நேச இசை மீண்டும் வர வேண்டும்

ஒரே ஸ்ருதியில்
ஆயிரமாயிரம் நாகசுரங்களில்
அடானா அலைகளே எழுக!
பல்லாயிரமாய் தவில்களே முழங்குக!

எங்கள் உணர்வுகளை
சிறைவைத்த கோட்டைகள்
இன்று பொடிப் பொடியாகும்
மீண்டும்
வீரபத்திரர் கோயில் வீதி
செம்பாட்டு மணற் பரப்பில்
நாகசுரக் கச்சேரி, மேளச்சமா லயங்களிலே
நாம் கரைவோம்
நம் பிறவிப் பயனைக் காண்போம்!

# மிளகாய் தோட்டத்திலே...

கரும்பு தோட்டத்திலே- இல்லை...
தேயிலை தோட்டத்திலே - இல்லை இல்லை...

மிளகாய் தோட்டத்திலே - எங்கள்
மிளகாய் தோட்டத்திலே - இவர்
மேனி வதங்கிட உழைத்திடுவார்

தோட்ட வரம்பினிலே - குழந்தை
துடித்துக் கடகத்திலே...
வாட்டம் தவிர்வாரோ - அன்னை
வரண்ட முலைதனிலே...

பள்ளி செல்லும் பருவம் - இவர்க்கோ
பழம் பொறுக்கும் அவலம்
உள்ளம் இரங்காதோ - இவர்
உலகம் விடியாதோ...

கூலியைக் கூட்டு என்றால் - இவர்கள்
குடிசையையும் எரிப்பார்கள்
தாலியறுப்பார்கள் - குடிக்கும்
தண்ணீரையும் கெடுப்பார்கள்

பனையால் விழுந்தவர்கள் - இன்றும்
படுகின்ற உழக்கல் எல்லாம்
இனியும் தொடருமென்றால் - இங்கு
எவருக்கும் விடிவு இல்லை

# மலைவாழையல்லவோ!

ஏன் நின்றாய் சிலைபோல...
உன் கையில் புத்தகம் எங்கே!
பறித்ததா? எறிந்ததா?
பசியின் கொடுமையா?

பாணும் சம்பலும்
தினங்களுக்குச் சாரமும்...
கண்ணா
எல்லாம்
கருணையினால் அல்ல

பள்ளம் நிரப்பவும்
பாத்திகள் செய்யவும்
உன்னையல்லால் வேறே யார் கதி
உன்
புத்தகத்தைப் பறிக்காமல்
அவர்
காசுப் புத்தகத்தில் கனம் ஏது?
தம்பி,
புத்தியாய் நடந்து கொள்!
புத்தகத்தைப் பற்றிக் கொள்!
மலை வாழையல்லவோ கல்வி

# அர்த்தம் வேண்டும்

நிலமகளே
எந்தையும் தாயும் குலவி மகிழ்ந்த
என் தேசத்து
நிலமகளே

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
என்று உன்னைப் புகழ்வார்கள்...
நான் உன்னை இகழவில்லை
ஆனாலும்
உன் பொறுமைக்கு என்னம்மா அர்த்தம்?

உடையா பகுதிகளும், உடையவர் பகுதிகளுமே
அடையும் படியாய் கிடந்தாய்
உனைப் பதப்படுத்திப் பாடுபடும் மக்களோ
பள்ளத்திலே கிடந்தார்

இன்றோ
எல்லாப் பகுதிகளும் அழியும் படியாய்
கொலை வலயங்கள் வளர்ப்பாய்...
உன் பொறுமைக்கு என்னம்மா அர்த்தம்?

பொறுத்தவள் நீ பொங்கும் பூகம்பத்தின்
சக்தியையும் அறிவேன்
ஆனாலும்
உன் பொங்கலிலே
பள்ளத்தில் வீழ்ந்தவர்கள் எழுந்திடவும்
உள்ளமிலார் எலலாம் வீழ்ந்திடவும்.
ஏற்பாடு வேண்டும்!
இல்லையெனில்
உன் பொறுமையைப் போல்
பொங்குதலும் அர்த்தம் இழக்கும்

# என்னைப் பிடித்த கருமை

சந்தனப் பொட்டும் சந்தன நிறமும்
எந்தனின் அப்பாவுக்குப் பிடிக்கும்
எனக்கும் சந்தனம் பிடிக்கும்

அறிவும் அனுபவமும் சேரச்சேர
ஆசைதரும் நிறங்கள் கூடும்
ஆனால்
எப்போதும் துயரம்
எதிர்ப்பின் சின்னம்
கருமை தூரவே இருக்கும்

பின்னர் எனது
உலகம் விரிய
கறுப்புக் கவிதைகள்
கறுப்புச் சக்தி
அறிய அறிய கருமையும் நெருங்கும்

இன்றோ,
இதயம் பிளக்கும்
தியாகச் சின்னமாய்
கருமை உதிரம் கொட்டும்

# இன்னந் துயிலுதியோ!

விடிந்திடுமோ...
எங்கள்
குடிசையிலும்
வெளிச்சம்
விழுந்திடுமோ...

குப்பி விளக்கினது
ஒளிதூர்ந்து போகிறதோ
தப்பிதமோ...
வரலாறு
தவறாகிப் போய்விடுமோ...

இன்னந் துயிலுதியோ...

உன் விளக்கைத் தூண்டுதற்கு
யாரை நம்பி நீகிடந்தாய்
இன்னந் துயிலுதியோ...

நம்பிக்கை குறைவதற்கு
ஞாயமில்லை
நீ எழுந்தால்,
சூரியனைக் கண்டிடலாம்
எழு!

# பாரதி தேசத்தில்
# என்கவிதை அரங்கேற்றம்

'உன்கையில் பிள்ளை
உனக்கே அடைக்கலம்' என்று
என் கவிதை அரங்கேற்ற
அவன் தேசம் சென்றிருந்தேன்

என்கையில் கவிதை
அச்சிடும் பதிப்பகம்
பல தேடி நான் அலைந்தேன்
"கவிதையா சார்... இப்ப, ஓடவே ஓடாது
கண்ணதாசனா நீங்கள்...
சிலோனிலிருந்து வந்ததால் செய்யலாம்,
கணக்குச் சரி யென்றால்..."

கணக்கினைப் பார்த்தேன்
'பெயிலாகிப்' போனேன்
என்
கவிதைநூல் கனவும் அழும்

அத்துயர் வேளை
ஈழத்தின் கவிதை
வளர்ப்பவர் ஒருவருள்ளார்
என்ற
தித்திக்கும் செய்தியும் காதில் விழ
அவர்
தரிசனம் தேடிச் சென்றேன்

'ஈழத்து நூல்கள், பிரசுரம், விற்பனை
ஈங்கென் இலட்சியம்...!'
பிரகடனத்துடன் பிரகிருதி அங்கு
பெருமாள் போல் தரிசனம்...

தேச இலக்கியத் தொண்டனின் யதார்த்த
கோலமும் கண்டு கொண்டேன்
அவனும்
காசுப் பேய்,
இனம் கண்டேன்
இவன்
என்னது ஊரவன்
எம்மால் பிழைப்பவன்
என்பதை எங்கு சொல்வேன்!

பாரதி தேசத்தில்
கவிதை அரங்கேற்றும்
ஆசையைத் தொலைத்து விட்டேன்.

## அப்... பா.....

தோளிலே தூக்கி வைத்து
தூரங்கள் காட்டி விட்டு
நீளவே போன தென்னப்பா...
நீங்கள் இல்லா வாழ்வு இருளப்பா

அப்பா...அப்பா...எனைக் கேட்கவில்லையா...
அம்மாவைத் தங்கச்சியை தெரியவில்லையா...
இனி
எப்பதான் நாலு பேரும் சந்திப்பது...
உடன்
'அப்பு' என்று தூக்கி விடவந்திடுங்கள்

தனிமையில் நானழுது கண்டதென்ன...
உங்களை
தனிமையில் போகவிட்ட கொடுமை யென்ன
இனியிந்த வாழ்க்கையில் அர்த்தமென்ன...
எல்லாம்
கனவென வெளித்த பின்னால்
கவிதையென்ன

சாந்தி பெறுக, அப்பா...
சாந்தி தருக.

# விழுவதும் எழுவதும்[‡]

❑ நெஞ்சக் கடலினிலே–கவலை
நீளக் கிடக்குதம்மா...
பிஞ்சுப் படகினிலே–சுமைகள்
பெரிதாய் அழுத்துதம்மா

அஞ்சு வயதினிலே...அம்மா
ஆறு...தொடங்கியது...
மிஞ்சும் காலமெல்லாம்–அறிவு
மெல்ல மெல்ல வளர்ந்ததம்மா...

அறிவும் அனுபவமும்–ஒன்றாய்
இணையும் பருவத்திலே...
முறியும் சிறகுகளால்–கனவுப்
பறவை துடிக்குதம்மா...

❑ மானுடத்தைக் காக்க வந்த
மாமனிதன் நீ தளர்ந்தால்
யாரிடத்தில் போயுரைப்பதோ–மனிதம்
தோல்வியென்று போய்விடுவதோ...

நம்பிக்கை குறைவதற்கு
ஞாயமில்லை நீ எழுந்தால்
எம்மகனே, எதிர்காலம்
உன் கையில் எழுந்திடடா!
இன்று வரும் இடரெல்லாம்
பனியாக மாறிவிடும்
உன்னதனே! எம் உயிரே!
உடனெழுந்து வரவேண்டும்!

‡ *1988 யாழ். இந்துமகளிர் கல்லூரி அரங்கம் கண்ட என்* **கலையில் உயிர்க்கும் மனிதன்** *- இசை நடனச் சித்திரத்திலிருந்து.*

# கரை சேர்ந்தோம்

கனவுகளில் இருந்த காதலி
நினைவினிலே வந்தாய்
வாழ்வினி

சந்தன மேடை என் இதயத்திலே...
உன்,
சதங்கையின் நாதங்களைக் கேட்டிருந்தேன்
மந்திரமில்லாத மயக்கத்திலே...
மனதிலே உன்னையே வரித்திருந்தேன்

நம்பிக்கையே வாழ்வின் அர்த்தமென்று
நானிருந்தேன்
உனக்காய் தவமிருந்தேன்
நம்பியே இன்றெனைத் தந்து விட்டேன்
நாளை உன் கைகளில் என்றிருப்பேன்

பெண்ணைக் கரை சேர்த்தேன்
என்று சொல்வர்
நான்,
பெண்ணால் கரை சேர்வேன்
என்று சொல்வேன்
உன்னால் நம் வாழ்வின் அர்த்தங்களை...
இன்னும்
உணருவேன், உயருவேன், என்றிருப்பேன்!

இனியொரு விதி செய்யும் நினைவினிலே
இல்லத்தில் விளக்கேற்றும் இனியவளே
கனிகின்ற பண்பாட்டின் கானங்களாய்
இந்த
கவிஞனின் காவியம்
நீ வளர்வாய்

# அக்கா என் ஆதாரம்

எனக் கொரு அக்கா இருக்கின்ருள்
என் வாழ்வின்
அர்த்தங்களின் ஆதாரமாய்

கல்வியினுல் உயர்ந்த கலைமகள்
இல்லாமையை ஒழித்து நிற்கும் திருமகள்
எல்லோர்க்கும் வாழ்வென்னும் பெருமகள்
அதனுல்
ஏழைகளுக்கு அவ்ள் என்றும் மலைமகள்...

அவளுடைய பாதையிலே
அடியெடுத்து வைத்தவன்
அறிவியலின் கோலங்களை அளந்து படிப்பவன்
ஆயகலைகளிலும் ஆற்றல் வளர்ப்பவன்
அதனுல்
அவளைப் போல் அன்பினுல் உலகாள்பவன்

தனக்கென பொருள் எதையும் சேர்க்காதவள்
ஆனுல்,
தளர்ந்தொரு நாள் நோய் என்றும் இருக்காதவள்
எனக்கெனச் சொல்லித் தரும் மந்திரங்களில்
உழைப் பென்ற அற்புதமே
உயர்வென்பவள்
அக்கா என் ஆதாரம்

# தங்கச்சியின் விடுதலை

என் தங்கச்சிக் கொரு
புதிய பாடல்
இன்று பாடுவேன்
எங்கள்
தங்க கனவினில் ஒன்று கனிந்த
சங்கதி தெரியுமா...

என் கண்களை மறைக்கும் கண்ணீர்துளிகள்...
கண்மணி உன்னைக் கரைசேர்த்த
களிப்பின் உச்சமா...

பெண்ணுக்கு இங்கே
கல்வி, தொழில் தான்
கரைகள் காட்டிடும்
உன்,
எண்ணப்படி ஒரு துணை வந்தாலும்
ஏற்றம் காத்திடும்.

ஆசைக் கொருமகன்
ஆஸ்திக் கொருமகள்
ஊரார் சொன்னது
இன்று
ஆஸ்திகள் இல்லை, அப்பா இல்லை
அப்புவின் 'வேர்' கண்டோம்

வேர் கண்டோம்
வேரே கண்டோம்
ஆயுள் வேத மென்ற
வேரையே கண்டோம்

## Key tack ❦

கனம் தாங்க முடியாமல்
மௌனமும் கலைகிறது
நீ தந்த அந்த Key tack கூட
Pocket இல் கனக்கிறது

உன் நினைவின் கனம்
நிலைத்திட இதுவும் துணையா...

நேற்றுக் கூட
பாரதியின்
'பேசாப் பொருளை'
பேச நான் நேர்கையிலே
பேசாப் பொருளாய் நீ எழுந்தாய்
நினைவிருக்கா
அன்று பாரதி நூற்றாண்டு வேளை
நாம் கண்ட கவிதா நிகழ்வு
உன் ஆதாரக்குரலில்
பாரதியின் அந்த 'கேட்கா வரம்'
பின் பிலஹரியில் நம் 'விடுதலை'
இன்று நான் தனியன் ஆனேன்

'கண்ணீரைத் துடைத்துக் கொள்!'
இது உன்
தமிழாக்கக் கவிதைகளின் வழி
நானெழுதும் கறுப்புக் காவியம்
அது உன்
திறனாய்வை காத்திருக்கும்

❦ *என் இனிய நண்பன் ஒருவன் வெளிநாடு சென்று திரும்பிய போது அன்பின் அடையாளமாகத் தந்தது - இந்தத் திறப்புக் கோர்வை.*

# எனது வேகமும் எருமைகளும்

வாயு வேகம்...மனோ வேகம்...
பாரதியின் ஞானரதம் போல்
பாங்கானது என் வேகம்

ஆனாலும் இவ்வுலகில்
என் பயணம் ஓர் அவலம்...

'ஏரோப்பிளேனை'க், கொண்டவரும்
எருமைகளாகக் கிடக்கின்றார்

நானோ எனது அப்பாவின்
'ரலி சைக்கிளில்' பறக்கின்றேன்!...

என்ன செய்வேன்! என் மனவேகம்
எருமைகளாலே ஓய்வதில்லை

என்ன மழை தான் பெய்தென்ன?
எருமைகளுக்கு மன மெங்கே!
மனமில்லாமல் வேக மெங்கே!

என்ன செய்வேன்! என் மன வேகம்
எருமைகளாலே ஓய்வதில்லை

# பன்றிக் கெய்த குளமும்
# சித்திரைப் பௌர்ணமி நிலவும்

பாடுகள் தாண்டி நமது பயணம்
பன்றிக் கெய்த குளம் அடையும்

நீட்டு வழிக் களைப்பு
நிலவிலே குளிரும்
நீட்டி நிமிர்ந்து
நிலவிலே தெருவோரம்
மண்ணில் படுக்கையில் தான்
அந்த மழலை அழும்

'அப்பா...பூசா.... அப்பா...பூசா'
மந்திரமா...
அருகில்
மூன்று வயதுக் குழந்தையுடன்
முப்பது வயது அம்மா

மூன்று மாதக் குழந்தையாய் இருக்கையில்
தொலைந்த அப்பாவை
தேடும் பயணம்...
இது அம்மா சொன்ன கதை

சித்திரைப் பௌர்ணமி நிலவும் சுடும்
இந்தப் பயணங்கள் என்று முடியும்...

# கண்ணீரைத் துடைத்துக் கொள்

கண்ணீரைத் துடைத்துக் கொள்ளம்மா...
அம்மம்மா...
கண்ணீரைத் துடைத்துக் கொள்ளம்மா
உன்னுடைய பிள்ளைகள் நாம்
உனக்காக இருக்கையிலே...
கண்ணீரில் கரைவதேனம்மா...

உன்னை விட்டுப் போனவரை
எண்ணி அழுவாயோ...
உடனிருக்கும் நாங்கள் படும்
பாட்டை நினைவாயோ...
என்னம்மா, நீ தளர்ந்தால்
எங்கள் நிலை என்னகும்...
கண்ணீரைத் துடைத்துக் கொள்ளம்மா

கண்டு வந்த வசந்தங்களைக் கருத்தில் கொள்ளம்மா...
இனி
கண்டிடும் விடிவுகளை வரவில் வையம்மா...
நம்பிக்கை தான் வாழ்க்கை
இது
நீ தந்ததம்மா... உன்னை
வாழவைக்க நாமிருக்க
கவலை ஏனம்மா...
கண்ணீரை துடைத்துக் கொள்ளம்மா
காலம்
வெல்லுகின்ற கவிதைகளாய்
வாழ்வமம்மா!

# மழை வேண்டும்

மழை வேண்டும்
வரண்ட நம் நிலம் குளிர
மழை வேண்டும்

என்ன செய்யலாம்...
காடுகள் வளர்த்தல்
கூடவே
கற்பினை வளர்த்தல்
கொடும்பாவி எரித்தல்
காவியம், வசந்தன்
பிரித், யாகம்
மழை வர வழி செய்யுமா?

இல்லை
மேலையோ அன்றித் தாய்லாந்திலிருந்தோ
நிபுணர் வர வேண்டுமா?

'எங்கள் வாழ்வின் வெளிச்சம் தடுத்த
வினையின் பயனே மழையின் பொய்ப்பு!'
இது
அம்மாவின் ஆராய்ச்சி முடிவு
அப்போ
மழையும் வினையின் பயனோ?

எப்படியோ
எங்களுக்கு மழை வேண்டும்
வரண்ட நிலங்கள் மட்டுமல்ல
இருண்ட இதயங்களும்
இளகிட மழை வேண்டும்

இதனைத் தடுப்பது எது என்றாலும்
அதிலே இடி விழ வேண்டும்
அந்த இடியில் மழை வர வேண்டும்

# உன்னைப் போல் ஒருவனாக...

விபுலானந்தா!
நீ ஒரு ஆளுமை முழுமை...
எனக்கு
நீ என்றும் ஆதர்ச அருமை...

உணர்வும் அறிவும் இணைந்த வடிவம் நீ...
உண்மை தேடி உயர்ந்த தலைவன் நீ...
விபுலானந்தா!
உன்னைப் போல் ஒருவனாகும்
எண்ணம் எனை வளர்க்கும்...

சின்னப் பிள்ளைப் பருவம்
உன்
மல்லிகைக் கவிதையில் மகிழ்ந்தேன்
பின்னர் உணர்வு வளர
உன்
சமூக உணர்வைப் பயின்றேன்
மின்னும் அறிவு வளர
உன் போல் அறிஞன்
ஆக விழைந்தேன்

கலையும், அறிவும் கலக்கும்
உன்
காலம் எனக்கு வாய்க்கும்
தலைவ, உனது ஆய்வின்
தன்மை எனையும் சேரும்...

உன்னைப் பாடும் இனிய
நூற்றாண்டின் விழா வேளை
உன்னைப் போல உயரும்
என் எண்ணம் உறுதியாகும்

# அர்த்தங்கள் தெரியும்

எங்களது தேசமெல்லாம்
நாதஸ்வரம்... தவில்...
பொங்கிவரும் ஓசையிலே...
புதிய சுகம்...

ஊமைக் குழல் ஊதிய
காலங்கள் போயின
ஓராயிரம் ராகங்கள் பேசின
ஒரு நீண்ட காலத்து
உணர்வுச் சுமையெல்லாம்
கரைகின்றன...கரைகின்றன...
கரைகின்றன...

வசந்தத்தை வரவேற்கும்
எங்கள் ஊர் வசந்தன்
வளம் சொல்லி மீண்டும் தொடங்கும்
பனைமரமாய் நெஞ்சம்
பெருமையில் நிமிரும்
பண்பாட்டின் அர்த்தங்கள் புரியும்...

தொழில்களெல்லாம் இங்கே
யாவர்க்கும் பொதுவாய்...
திறன்களின் வழியே அமையும்
பொருள் வளம், மன வளம்
பொருந்திடும் வாழ்க்கையில்
பொன்னுலகம் தெரியும்

## ❒ பின்னணி

எந்தையும் தாயும்
எனக்கு,
அறிவும் கலையும் தரும் ஆசான்களும்
இந்த உலகும்
இனிய உறவுகளும் தான்
எந்தனது பின்னணி

எவரை என்று குறிப்பிடுவேன்!
நினைவில் மேலெழும் சிலரை நினைவேன்
ஏனையோர் பொறுத்தருள்க

ஆக்கக் கலைக்கெனை அறிமுகம் செய்து
என்
சந்தன மேடைக்கு உயிரும் தந்த
அண்ணன் **பரா**
**குலசீல நாதன்**
Your tinkling anklets... oh
they make me dizzy
என என்னை நயந்த C.V.R.
இன்னும்,
செல்லத் தமிழில் என் வாழப்பிறந்த செல்வத்தை
வாழவைத்த **சுஜாதா அத்தநாயக்கா**
என்
நீலக்கயல் விழியை, தாரகையை காட்டிய
**பத்மலிங்கம்**...

கவிதையினால் எனக்கு உறவுகளாகிய
**அங்கையன்** அண்ணை
**கைலாஸ்** சேர்
**சர்வம்** அக்கா
**ஜெயபாலன்**
**மௌனகுரு**
நமுனகுல **மித்ராவிலிருந்து**
கோப்பாய் **சிவம், ஸ்ரீ குமாரி** ஈறான
ரசிகர் கூட்டம்
என்
மாணவர்
ஆசிரியர்
நண்பர்

உறவுகள் என
இந்தப்பட்டியல் நீளும்

எனக்குக் களம்தந்த **வானொலியார்**, **தொலைக் காட்சி**
தினமென்னை கேட்கச்செய்யும் அறிவிப்பாளர்
என்னுடைய கவிதா அரங்குகளின்
பின்னணி **முத்துசாமி**, **கண்ணன்**
கலைஞர்களை நினைப்பேன்

என் கவிதைகளுக்கு கட்புலக்களம் தந்த
**தினகரன்**, **வீரகேசரி**
**ஈழநாடு**, **முரசொலி**
**மல்லிகை**, **அக்னி**, **தாயகம்** அனைத்தையும் நினைப்பேன்

இன்று இச் சந்தன மேடையின் அரங்கேற்றம்
அழகுறத் துணை நின்ற **தவம்** அண்ணை
ஒளிப்பதிப்பு துணைத் தொழிலர்
**செல்வி** இன்னும் லக்சு தொழிலாளர்

என் கவிதைக் கடிதங்கள் காத்த
என் **குகன்**
இன்னும் **முதலி**, **பாலா**, **சோதிநாதன்**, **சச்சி அண்ணை**
இன்றைய என் கவிதைகளை கேட்கின்ற குழந்தை **சண்**
இந்தத் தொகுப்பின் வேளையிலே
திறனாய்வு சொன்ன **ராஜ்**

குட்டியைக் காவும் பூனையென
என்கவிதைக் 'கட்டிங்', கொப்பிகள்
காவிக்காத்த என் தங்கச்சி **காந்தா**
இந்தக் கவிதை நூல் ஆசையை பொருளை
என்றொதந்து ஊக்கிடும் **மனோ** அக்கா
கனவுகளிலிருந்த என் சந்தனமேடை
நிதர்சனமாக உயிர்ப்பித்த என் **கௌரி**
இந்தச் சந்தனமேடையையே தந்த
என் **அப்பா அம்மா**
என் கவிதைப் பொருளான
**இந்த மண்**, **மானுடம்**

**வாழ்த்தி வணங்கிடுவேன்**

என். சண்முகலிங்கன் :

- கவிஞர்
  எழுத்தாளர்
  ஆக்க இசைக்கலைஞர்

- சமூக, மானுடவியல் ஆய்வாளர்

- சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நாகலிங்கம் நூலாலயம்